(4) ஒழுங்குப் பிரச்சினை.

திரு ஜே.பி-யின் உடல் நிலை குறித்து

திரு மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இறந்துவிட்டார் என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, இங்கும் அறிவிக்கப்பட்டது என்பது ஒரு மிகப்பெரிய தலைவரைப்பற்றிய அறிவிப்பை முறையாகத் தெரிந்து அறிவிக்கக்கூட முடியாமல் இந்த நாட்டில் மத்திய அரசு நிர்வாகம் இருக்கிறது. அதைப் பற்றி தாங்கள் விளக்க வேண்டும். மத்திய அரசின் அறிவிப்பை நம்பி, நாமும் அறிவித்து நம்முடைய சட்டமன்றத்திற்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிட்டதாகாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்திய அரசுபற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியாது. அவர்களைக் கேட்க முடியாது. நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். தவறானத் தகவல்களுக்கு வருந்துகிறோம். சரியானதாகத் தகவல் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*)யிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(5) வரவு-செலவுத் திட்டம், 1979–80 (பொது விவாதம்)—தொடர்ச்சி.

*திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நேற்றைக்கு நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பிரசவ வேதனையோடு அல்லலுற்றுக் கொண்டிருந்தார்கள். சுகப் பிரசவம் இன்று நடைபெற எல்லாம் வல்ல இயற்கையை நான் வேண்டுகிறேன். அந்த சுகப் பிரசவத்தில் நானும், மற்றுமுள்ள எதிர்க்கட்சி தலைவர்களும் எடுத்து வைத்த வரி விலக்குக் கோரிக்கைகள் எல்லாம் உதயமாகும் என்றும் நான் நம்புகிறேன். நேற்றைய தினம்..............

திரு செ. சிவசாமி: சார் பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, சுகப் பிரசவம் என்று சொன்னார்கள். என்ன குழந்தை என்பதை அறிவிப்பார்களா?

திரு மு. கருணாநிதி: வரி இல்லாத குழந்தை என்பதைக் குறிப்பிடுகிறேன்.

நேற்று மிக வேகமான நிலையில் மன்றத்தினுடைய விவாதங்கள் போய்க்கொண்டிருந்த போது பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களால் ஒரு சோகமான செய்தி இங்கு அறிவிக்கப்பட்டு, அனைவரும் ஒருவருக்கொருவர் பேசுவதற்குக்